இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
செவ்வாய்க்கிழமை 17.03.2026

# பொருளாதார மேம்பாடும் பாதுகாப்பும்

திராவிட மாடல் அரசின் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பெண்களுக்கான பொருளாதார மேம்பாட்டுக்கும் பாதுகாப்புக்கும் மிகுந்த முக்கியத்துவம் தந்து வருகிறார். அதனால்தான் அவர் செல்லும் இடமெல்லாம் பெண்கள் அதிகமான அளவுக்குக் கூடி அன்பான வரவேற்பை வழங்கி வருகிறார்கள்.

இதனை எதிரிகளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அதனால் பெண்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்ற பொய்யான பரப்புரையைச் செய்து வருகிறார்கள். இதனை பிரதமர் மோடியே செய்வதுதான் அதிர்ச்சி தருகிறது.

**மாண்புமிகு பிரதமர் அவர்கள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பெண்களுக்குச் செய்து தரும் திட்டங்களைப் பற்றி அறிந்திருந்தால் அப்படிப் பேசி இருக்க மாட்டார்.**

வீட்டில் இருக்கும் பெண்களின் உழைப்புக்கு அங்கீகாரம் தரும் வகையில் அவர்களுக்கு உரிமைத் தொகை தந்து வருகிறார் மாண்புமிகு முதலமைச்சர். பெண்களின் உழைப்பை அங்கீகரிக்கும் விதமாக, மதிக்கும் விதமாக மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்று அறிவித்தார் மாண்புமிகு முதலமைச்சர். இப்போது ஒரு கோடியே 31 லட்சம் மகளிர் மாதம் தோறும் ஆயிரம் ரூபாய் பெறுகிறார்கள். “**எங்க அண்ணன் ஸ்டாலின் தரும் மாதாந்திர சீர்**” **என்று சொல்கிறார்கள் பெண்கள்.**” “**இது உதவித் தொகை அல்ல, உரிமைத் தொகை**” என்கிறார் முதலமைச்சர்.

பெண்களின் பொருளாதார உரிமையை உயர்த்தி இருக்கிறது இத்தொகை, தன்னம்பிக்கையை உயர்த்திருக்கிறது இந்தத் தொகை. இந்தத் திட்டத்தை பல்வேறு மாநிலங்கள் இப்போது பின்பற்றுகின்றன. சில மாநிலங்கள் கொடுத்ததை நிறுத்தி விட்டன. அறிவித்த எண்ணிக்கையைக் குறைத்து விட்டார்கள். ஆனால் உரிமைத் தொகை பெறுகிறவர்களின் எண்ணிக்கையை உயர்த்தியது மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள்தான். இப்படிக் கொடுப்பதை தடுக்கப் பார்த்தது பா.ஜ.க.. ஒருவரை உச்சநீதிமன்றத்தில் வழக்குப் போட வைத்தார்கள். அதை முன்கூட்டியே உணர்ந்து மூன்று மாதத்துக்கான தொகையையும், 2 ஆயிரம் ரூபாயை கோடை நிதியாகவும் தந்தவர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள். இந்த ஒரு திட்டமே கோடிக்கும் மேற்பட்ட பெண்களை மகிழ்வித்த திட்டமல்லவா?

“முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்...” என்று முதல் அமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்ட அன்றே கோட்டைக்குச் சென்று இட்ட முதல் கையெழுத்து, ‘**பெண்களுக்கு கட்டணமில்லாப் பேருந்து**’ என்பதுதான். இதற்கு ‘விடியல் பயணம்’ என்று பெயர் சூட்டினார் முதலமைச்சர். மாதம் தோறும் 600 முதல் 1200 ரூபாய் வரைக்கும் பெண்களுக்கு போக்குவரத்துச் செலவை மிச்சம் செய்கிறது இந்தத் திட்டம். சொந்த ஊருக்குள் குறைந்த சம்பளத்தில் வேலை பார்ப்பதை மாற்றி, வெளியூருக்கு வந்து அதிக ஊதியம் பெறுகிறார்கள் பெண்கள். பேருந்துகளின் எண்ணிக்கையையும் அரசு அதிகப்படுத்திவிட்டது. பிங்க் வண்ணப் பேருந்துக்கு ‘**ஸ்டாலின் பஸ்**’ என்றே அடையாளச் சொல்லாக ஆக்கிவிட்டார்கள் பெண்கள். இது பெண்களுக்கு தினந்தோறும் பயனுள்ள திட்டமாக இருக்கிறது. லட்சக்கணக்கான பெண்களை தினந்தோறும் மகிழ்விக்கும் திட்டமாக இருக்கிறது.

அரசுப் பள்ளியில் படித்து உயர் கல்விக்கு வரும் மாணவியருக்கு மாதம் தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது. இதன் பிறகு உயர் கல்வி பெற வரும் மாணவியரின் எண்ணிக்கை அதிகமாகி வருகிறது. 41விழுக்காடு கூடி இருக்கிறது. பணிபுரியும் பெண்களுக்குப் பாதுகாப்பான சூழலை ஏற்படுத்துவதற்காக, அனைத்து மாவட்டங்களிலும் ‘தோழி’ விடுதிகள் இதுவரை தொடங்கப்பட்டுள்ளன. மகளிர் சுய உதவிக்குழுக்கள் லட்சக்கணக்கில் உருவாக்கப்பட்டுள்ளன. கோடிக்கணக்கில் அவர்களுக்கு கடனுதவி தரப்பட்டு தொழில் தொடங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

பெண்கள் பெயரில் பதியப்படும் சொத்துகளுக்கான பதிவுக் கட்டணத்தில் ஒரு விழுக்காடு குறைக்கப்பட்டுள்ளது. பெண்கள் பெயரில் வீடு,மனை உள்ளிட்ட சொத்துகள் பதிவு செய்யப்பட்டால் ஒரு விழுக்காடு பதிவுக் கட்டணம் ரத்து செய்யப்படுகிறது. 10 லட்சத்துக்கும் குறைவான மதிப்புள்ள வீடு, மனை, விவசாய நிலமாக இருந்தால் இந்தச் சலுகை பெறலாம். நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் புதிதாக வீடு ஒதுக்கும் போது சம்பந்தப்பட்ட குடும்பத்தில் உள்ள பெண்கள் பெயரில்தான் வீடுகள் ஒதுக்கப்படும் என்று அரசு அறிவித்துள்ளது. பெண்களுக்கு அதிகாரம், சொத்துரிமை தரும் முடிவாக இது அமைந்துள்ளது.

**குழந்தைத் திருமணம், குழந்தை பாலியல் வன்கொடுமை, குடும்ப வன்முறை உள்ளிட்ட பிரச்சனைகளுக்குத் தீர்வு காணும் பாலின வள மையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.**

**சிறுமிகள் மீதான பாலியல் வன்கொடுமை, 18 வயதுக்கு உட்பட்ட பெண்கள் மீதான கூட்டுப் பாலியல் வன்கொடுமை குற்றம் செய்வோருக்கு மரண தண்டனை விதிக்கும் சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. டிஜிட்டல் முறை, மின்னணு ரீதியான குற்றங்களுக்கு 3 ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்படும். முதல் தண்டனையாக இருந்தால் 5 ஆண்டும், அதற்குப் பிறகும் இருந்தால் 10 ஆண்டும் சிறைத் தண்டனை வழங்கப்படும்.கல்வி நிலையங்கள், விடுதி, திரையரங்குகள், வணிக வளாகங்களில் கண்காணிப்புக் கேமரா பொருத்த வேண்டும். வன்கொடுமைக்கு ஆளான பெண்ணின் அடையாளத்தை வெளிப்படுத்தினால் 3 முதல் 5 ஆண்டு சிறைத் தண்டனை தரப்படும்.**

**பெண்ணின் கண்ணியதை அவமதித்தல், பெண்ணை பின் தொடர்தல், மிரட்டுதல், ஆசிட் ஊற்றுதல் ஆகியவற்றுக்கும் தண்டனை அறிவிக்கப்பட்டது.**

**இப்படி பெண்களுக்கு பொருளாதார மேம்பாடும், பாதுகாப்பும் உறுதி செய்யும் கழக அரசு மீது களங்கம் ஏற்படுத்த நினைத்தால் அதனைப் பெண்களே ஏற்க மாட்டார்கள்.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (15.3.2026) கவிப்பேரரசு வைரமுத்து அவர்களுக்கு ஞானபீட விருது அறிவிக்கப்பட்டுள்ளதையொட்டி, அவரது இல்லத்திற்கு நேரில் சென்று வாழ்த்து தெரிவித்தார்.



கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (15.3.2026) முகாம் அலுவலகத்தில், பொதுப் பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் தனது பிறந்தநாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

## தமிழ்நாடு – புதுச்சேரி சட்டப்பேரவை பொதுத்தேர்தல் – 2026

# தி.மு.க. வேட்பாளர்கள் நேர்காணல்!

## தலைமைக் கழக அறிவிப்பு!

தமிழ்நாடு – புதுச்சேரி சட்டப்பேரவை பொதுத் தேர்தலுக்கு போட்டியிட விரும்பி தலைமைக் கழகத்திற்கு விண்ணப்பம் செலுத்தியவர்களை கழகத் தலைவர் அவர்கள் 17–03–2026 முதல் 22–03–2026ஆம் தேதி வரை, பின்வரும் மாவட்ட வாரியாக சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் நேர்காணல் வாயிலாக சந்தித்து தொகுதி நிலவரம் வெற்றி வாய்ப்புகள் குறித்து ஆராய்ந்து அறிந்திட இருக்கிறார்கள்.

குறிப்பிட்டுள்ள தேதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள மாவட்டத்தைச் சேர்ந்த மாவட்டக் கழகச் செயலாளர் மட்டும் வரவேண்டும். மாவட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் ஒன்றிய, நகர, பகுதிக் கழகச் செயலாளர்கள் வரவேண்டிய அவசியமில்லை. வேட்பாளர்கள் தங்களுக்கான ஆதரவாளர்களையோ, பரிந்துரையாளர்களையோ அழைத்து வரக்கூடாது என்றும், அவர்களையும் ‘அவர்களுக்காக விருப்ப மனு’ செலுத்தியோரையும் நேர்காணலுக்கு கண்டிப்பாக அனுமதிக்க இயலாது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

### மாவட்ட வாரியாக நேர்காணல் நடைபெறும் நாள் விவரம்

| நாள் – கிழமை | நேரம் | மாவட்டம் |
|---|---|---|
| மார்ச் 17 செவ்வாய் | காலை 9.00 மணி | புதுச்சேரி மற்றும் காரைக்கால் |
| மார்ச் 18 புதன் | காலை 9.00 மணி | தூத்துக்குடி தெற்கு, தூத்துக்குடி வடக்கு, திருநெல்வேலி கிழக்கு, திருநெல்வேலி மத்திய, திருநெல்வேலி மேற்கு, தென்காசி வடக்கு, தென்காசி தெற்கு, கன்னியாகுமரி கிழக்கு, கன்னியாகுமரி மேற்கு |
| ,, ,, ,, | மாலை 4.00 மணி | மதுரை வடக்கு, மதுரை மாநகர், மதுரை தெற்கு, தேனி வடக்கு, தேனி தெற்கு, விருதுநகர் வடக்கு, விருதுநகர் தெற்கு, இராமநாதபுரம், சிவகங்கை |
| மார்ச் 19 வியாழன் | காலை 9.00 மணி | கரூர், நாமக்கல் கிழக்கு, நாமக்கல் மேற்கு, ஈரோடு வடக்கு, ஈரோடு தெற்கு, ஈரோடு மத்திய, கோவை வடக்கு, கோவை மாநகர், கோவை தெற்கு, திருப்பூர் வடக்கு, திருப்பூர் மத்திய, நீலகிரி |
| ,, ,, ,, | மாலை 4.00 மணி | கிருஷ்ணகிரி கிழக்கு, கிருஷ்ணகிரி மேற்கு, திருப்பூர் கிழக்கு, திருப்பூர் தெற்கு, திண்டுக்கல் கிழக்கு, திண்டுக்கல் மேற்கு |
| மார்ச் 20 வெள்ளி | காலை 9.00 மணி | இராணிப்பேட்டை, வேலூர் வடக்கு, வேலூர் தெற்கு, திருப்பத்தூர், திருவண்ணாமலை வடக்கு, திருவண்ணாமலை தெற்கு, |
| ,, ,, ,, | மாலை 4.00 மணி | தர்மபுரி கிழக்கு, தர்மபுரி மேற்கு, சேலம் மத்திய, சேலம் கிழக்கு, சேலம் மேற்கு, கள்ளக்குறிச்சி வடக்கு, கள்ளக்குறிச்சி தெற்கு. |
| மார்ச் 21 சனி | காலை 9.00 மணி | திருச்சி வடக்கு, திருச்சி மத்திய, திருச்சி தெற்கு, தஞ்சை வடக்கு, தஞ்சை தெற்கு, தஞ்சை மத்திய, பெரம்பலூர், அரியலூர் |
| ,, ,, ,, | மாலை 4.00 மணி | புதுக்கோட்டை வடக்கு, புதுக்கோட்டை தெற்கு, கடலூர் மேற்கு, மயிலாடுதுறை நாகப்பட்டினம், திருவாரூர் |
| மார்ச் 22 ஞாயிறு | காலை 9.00 மணி | கடலூர் கிழக்கு, விழுப்புரம் வடக்கு, விழுப்புரம் மத்திய, விழுப்புரம் தெற்கு, காஞ்சிபுரம் தெற்கு. |
| ,, ,, ,, | மாலை 4.00 மணி | திருவள்ளூர் கிழக்கு, திருவள்ளூர் மத்திய, திருவள்ளூர் மேற்கு, காஞ்சிபுரம் வடக்கு, சென்னை வடக்கு சென்னை வடகிழக்கு, சென்னை தென்மேற்கு, சென்னை தெற்கு, சென்னை மேற்கு, சென்னை கிழக்கு |

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 15-03-2026.

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.